1990 மே 11]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழினத் தலைவர் முதலமைச்சர் அவர்களுடைய அன்னை, நமக்கெல்லாம் அன்னை. அவருடைய பெயரை நீக்கி இருந்தாலும் தமிழர்களுடைய நெஞ்சம் எல்லாம் நீக்கமற இடம் பெற்று இருக்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி நாம் முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீரிய வித்துக்களுக்காக சான்றிதழ்கள் வழங்கும்போது பொதுவாக ஜெர்மினேஷன் டெஸ்டு மட்டும் தான் பார்க்கிறார்கள். எத்தனை சதவீதம் அந்த பயிர் முளைக்கும் என்று பார்த்தால் சாதாரணமாக எந்த விதையும் 85 சதவீதம், 90 சதவீதம் அளவுக்கு முளைக்கும். ஆனால் அதிலே இருந்து முளைத்து வரக்கூடிய பயிர்கள் நல்ல மகசூலைத் தர வேண்டும். அந்தப் பயிர்கள் தரமான பயிர்களாக இருக்க வேண்டும் என்று விஞ்ஞான ரீதியாக விதைப் பண்ணைகளில் நல்ல முறையில்அந்தவீரிய விதைகளை உற்பத்தி செய்யவேண்டும். ஆனால் அந்த அளவுக்கு இது வரையில் உற்பத்தி செய்யவில்லை. குறிப்பாகப் பருத்தி விதையில் அந்த முயற்சி மேற்கொள்ளப் படுமானால் தமிழ்நாட்டில் பருத்தி மகசூல் அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையில் அதனை விஞ்ஞான முறையில் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ரக விளைச்சலை அதிகரிக்க விதைகளை விஞ்ஞான ரீதியிலே தான் நம்முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்து அதன் பின்னர் தான் அப்படிப்பட்ட வீரிய விதைகளை உற்பத்திச் செய்து உற்பத்தியை அதிகரித்து நம்முடைய வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டு இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்குகிறோம். போதிய அளவுக்கு நம்மால் கொடுக்க முடியவில்லை என்பது உண்மை. அரசு அதற்காக நடவடிக்கை எடுக்கும்.

கலப்பு மணத் தம்பதிகளுக்கு முன்னுரிமை

* 2115—திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆகியவைகளால் கட்டப்படும் வீடுகளை ஒதுக்கீடு செய்வதில் கலப்பு மணத் தம்பதிகளுக்கு முன்னுரிமை வழங்கப் படுமா ?

[1990 மே 11

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

ஆம், சென்னை மாநகரில் மட்டும் 10 வீடுகள்/வீட்டுமனைகள் வீட்டுவசதி வாரியத்திலும், குடிசை மாற்று வாரியத்திலும், கலப்பு மணத் தம்பதிகளுக்கு ஒதுக்கப்பட அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இந்தச் சலுகையை எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு திருமணத்தை வரவேற்கின்ற இந்த அரசு சென்னை மாநகரத்திலே மட்டும் கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு வீடுகள் ஒதுக்குவது போல் எல்லா மாவட்டங்களிலும் ஒதுக்கப்படவேண்டும் என்பதோடு அவர்களுக்கு ஒதுக்குகின்ற அந்த வீடுகளுக்கு முன் பணம் கட்டுவதில் 50 சதவீதம் சலுகை அளிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுமனைகள், வீடுகள் ஒதுக்குகின்ற நேரத்தில் அதற்காகக் கட்டப்படும் தொகையில் கிட்டத்தட்ட 1,200 ரூபாய் ஒதுக்கீடு செய்து மானியமாக அந்தத் துறை வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத் தம்பதிகள் ஆதி திராவிடர்கள், மலைவாழ் மக்களுக்கு என அரசு ஆர்ஜிதம் செய்து இலவச வீட்டு மனைகள் வழங்குவதில் கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு எவ்வளவு சதவீதம் ஒதுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

9—35 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுக்காடுகளைப் பற்றி இது வரையில் அரசு எந்தவித முடிவும் எடுக்கவில்லை. அதைப் பற்றிய முடிவு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நம்முடைய நாட்டிலே பல மதங்கள் பல ஜாதிகள், பல வகுப்புகள் இருக்கின்றன. அதிலே எந்தெந்தப்

1990 மே 11]

பிரிவு எப்படித் திருமணம் செய்துகொண்டால் கலப்புத் திருமணம் என்று அரசு நிர்ணயம் செய்கிறது? மதத்திற்கு மதமா அல்லது மதம் விட்டு மதமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஐயா, இது வீடு பற்றியது. அப்புறம் விரிவாகப் பேசலாம். வீட்டைப்பற்றிப் பேசுங்கள், ஐயா.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: சரி. கலப்புத் திருமணம் என்பது மதம் விட்டு மதமா, ஜாதி விட்டு ஜாதியா? எதை வைத்து அரசாங்கம் நிர்ணயம் செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி விவரமான, விடையை அடுத்த கேள்விக்கு விடையளிக்கும்போது தெரிவிக்கலாம் என்று இருந்தேன். இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு பதில் அளிக்கின்ற முறையில், கலப்புத் திருமணம் என்பது, கலப்பு மணத் தம்பதியர்கள் ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினராக இருக்க வேண்டும்; அவர்கள் முற்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும். தம்பதியினர் ஷெட்யூல்டு வகுப்பினர் அல்லது பழங்குடியினராக இருந்து, பின்தங்கிய வகுப்பில் திருமணம் செய்யவேண்டும். ஷெட்யூல்டு வகுப்பினர் பின்தங்கிய வகுப்பில் திருமணம் செய்யவேண்டும், முற்பட்ட வகுப்பினராக இருந்து பின்தங்கிய வகுப்பில் அல்லது மிகவும் பின்தங்கிய வகுப்பில் திருமணம் செய்யவேண்டும். இப்படிப் பட்டவர்களாக இருப்பின் திருமணம் செய்துகொள்ள அதிகாரம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டிலே நடைபெறுகின்ற கலவரங்களில் பெரும்பான்மை ஜாதிப் பிரச்சினையை முன்வைத்தே வருகின்றன. இந்த ஜாதிச் சண்டையை ஒழிப்பதற்கு, கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பதற்காகக் கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு அவர்கள் வாழ்கின்ற அந்த கிராமத்திலேயே அவர்களுக்கு ஒரு வீட்டுமனைப் பட்டா..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வினா, இந்த அமைச்சருக்குத் தொடர்புடையது அல்ல.

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு வீடு வழங்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போன்று அவர்களுக்கு வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை வழங்கப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் அதுபற்றி அரசின் பரிசீலனையில் இல்லை. இனிமேல் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜமுனாமருத்தூர் லேம்ப் கூட்டுறவுச் சங்கம்.

* 4030—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், போளூர் வட்டம், ஜமுனாமருத்தூர் லேம்ப் கூட்டுறவுச் சங்கத்தில் பெரிய அளவில் மோசடி நடந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், போளூர் வட்டம் ஜமுனாமருத்தூரில் இயங்கிவரும் ஜவ்வாது மலை பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 7,57,339.95 அளவில் மோசடி நடந்துள்ளது. மோசடி செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, மாவட்டம் ஒன்றாக இருந்தபோது போட்ட கேள்வியாகும். இப்போது திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டத்திலே அந்த ஜமுனாமருத்தூர் லேம்ப் சொசைட்டி அடங்கியுள்ளது. மலைவாழ் மக்களுக்கு பெரும்பாலும் எல்லா வகையான காரியங்களும் இந்த சொசைட்டியில்தான் நடைபெறவேண்டும். இங்கே பெரிய மோசடி நடந்துவிட்ட காரணத்தினாலே சரியான அதிகாரிகள் கூட இல்லாமல் இந்த சொசைட்டியும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த மலைவாழ் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அந்த வழக்கைத் துரிதப்படுத்தவும் நல்ல அதிகாரிகளாக அங்கே நியமனம் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோசடி செய்த அதிகாரிகள் மீதும் அலுவலர்கள் மீதும் அரசு தக்க நடவடிக்கை எடுத்துள்ளது.